விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆடி 7 ஷவ்வால் 1 இதழ் 160

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23—7—82

தமிழகப் பொலிசாரின் தகவல்களைக்கொண்டு

## இலங்கையில் தமிழ்இளைஞர்மீது பொலிசார் சித்திரவதை! நெடுமாறன் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ்நாட்டில் கைதான இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர்கள் குறித்து தமிழ்நாடு பொலிசார் தயாரித்திருந்த அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இப்போது இலங்கையில் கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்களும் காவலில் இருக்கும் தமிழ்இளைஞர்களும் பொலிசாரினால் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு காந்தி காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

திரு.நெடுமாறன் இதுகுறித்து பத்திரிகை நிருபர்களிடம் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தீவிர இலங்கைத்தமிழ் இளைஞர்கள் பற்றி தமிழகப் பொலிசார் தயாரித்த அறிக்கையின் விபரங்கள் எவ்வாறோ இலங்கைப்பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. அவற்றைப்படித்த பொலிசார் அவற்றின் அடிப்படையிலேயே தமிழ் இளைஞர்களைத் துன்புறுத்துகின்றனர். தமிழகப் பொலிசார் திரட்டிய விபரங்கள் இலங்கைப் பத்திரிகைகளுக்கு எவ்வாறு தெரிய வந்தன என்பது பற்றி உடன் விசாரிக்க வேண்டும். இது குறித்து நான் இந்திய மத்திய அரசிடமும் தமிழக அரசிடமும் கோரிக்கை விடுக்கத் தீர்மானித்துள்ளேன். [வெ-இ]

## ஜே. ஆர். - அமிர் சந்தித்தனர்

(கொழும்பு)

எதிர்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்து மாவட்ட அபிவிருத்தி சபை அதிகாரங்கள் குறித்து பேச்சுநடத்தினர். [ம]

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு

# அதிகாரம் கையளிக்கும் திட்டம் அமைச்சரவை அங்கீகரித்தது!

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு அதிகாரம் கையளிக்கும் திட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இதுகுறித்து விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என ஜனாதிபதி எமக்கு உறுதி அளித்துள்ளார்.

## அமைச்சர் 'தேவா' மக்களின் மனக்குழப்பத்தை தீர்க்க வேண்டும்

### பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் 'அமிர்'

(கொழும்பு)

இந்த உண்மையை அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் ஒப்புக்கொண்டு மக்கள் மனதில் வீண் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும்-

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு, அ. அமிர்தலிங்கம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''சமீபத்தில் நான் வெளிநாடு சென்றிருந்த போது மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபை கூட்டத்திலும், வேறு சில கூட்டங்களிலும் அமைச்சர் திரு. தேவநாயகம் பேசியதாக ஏற்கனவே வெளிவந்த செய்திகளுக்கும் அவர் பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டிக்கும் பதிலளிக்கப்பட வேண்டியிருப்பதால் இவ்வறிக்கையை விடுக்கிறேன்''

''நான் நியுயோர்க் 'தமிழ் ஈழ' மகாநாட்டிற்கு செல்லும் முன் அங்கு 'தமிழ் ஈழம்' பற்றி நான் பேசக்கூடாதென்று ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டதாக அவர் கூறிய செய்தி சகல பத்திரிகைகளிலும் 'ஈழநாடு அல்ல' வெளிவந்தது.

ஜுலை 11-ம் திகதி ஆங்கில தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவரது அக்கூற்று உண்மையல்லவென அவரே கூறியுள்ளார். அவர் ஏதோ கோபத்தில் கூறியிருந்தாலும் தவறான செய்தி வெளிவந்த ஏனைய பத்திரிகைகளுக்கும் திருத்தம் கொடுக்காத காரணத்தால் அக்கூற்று முற்று முழுதாக கற்பனை என்பதை நான் தெளிவுபடுத்த வேண்டியவனாகிறேன்.

### ஆத்திரத்தில் அமைச்சர்...

''அமைச்சர் பத்திரிகைப் பேட்டியில் கூறியிருப்பதுபோல் ஆத்திரத்தில் மாவட்ட அபிவிருத்திசபையின் அதிகாரம் பற்றியும் மிகத்தவறான விபரங்களைக் கூறியிருக்கிறார். இதைப்பற்றியும் அந்த ஆங்கிலப் பத்திரிகையில் தமது கூற்றைத் தாமே மறுதலித்து, மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் நடைமுறைத்திட்டம் அரசுக்கும், தமிழர் விடுதலைக்

(8-ம் பக்கம் பார்க்க)

VIMEL'S TEA



விமல்ஸ் தேயிலை

தேநீர்ப் பிரியர்களே!

மணம், குணம், தரத்தில் சிறந்த விமல்ஸ் தேயிலை (B. O. P. F.) வாங்கித் தேநீர் அருந்துங்கள்.

குறைந்த விலையில் சிறந்த தேயிலை

B. O. P. F. 500 கிராம் — ரூ. 13-00
200 கிராம் — ரூ. 5-50

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு)

விமல் எக்ஸ்போர்ட்

தலைமையகம்:
1, டாம் வீதி,
கொழும்பு - 12.
போன்: 31641

கிளை
142, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

3949

## தேர்தல்கள் வெகுவிரைவில் நடைபெறும்!

### நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஜே. ஆர். செய்தி

(கொழும்பு)

வெகுவிரைவில் தேர்தல்களை நடத்த உள்ளோம் ஆனால் எப்பொழுது அத்தேர்தல்களை நடத்துவதென்று இன்னமும் தீர்மானிக்கவில்லை ஆயினும் தேர்தல் ஜனநாயக நடைமுறையில் ஓர் அம்சம் என்பதை நாம் மறுக்கவில்லை.

இன்றைய அரசாங்கம் பதவி ஏற்று ஐந்து ஆண்டுகள் பூர்த்திஅடைவதை ஒட்டி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

எமக்குள்ள பெரும்பான்மை பலத்தைக்கொண்டு எம்மால் தேர்தல்களை ஒத்திவைக்க முடியும். நாம் அப்படிச் செய்ய விரும்பவில்லை. இந்தநாட்டு மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதை நான்ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்.

இந்த நாடு அரசியல்வாதிகளுக்கோ அன்றி ஜனாதிபதிக்கோ அரசுக்கோ ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

## 'சற்றடே றிவியூ' பத்திரிகைக்கு பாராளுமன்றத்தில் சரத் பாராட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'சற்றடே றிவியூ'' ஆங்கில வார சஞ்சிகைக்கு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகமவே இப்பாராட்டைத் தெரிவித்தார்.

''விமானக்கடத்தல் காரரான சேபால எக்கநாயக்காவின் விவகாரம் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட கேலிக்குரிய நடவடிக்கை குறித்து 'சற்றடே றிவியூ'' நன்றாக விமர்சித்துள்ளது. ''அப்பத்திரிகையில் இனரீதியான கருத்துக்கள் சில இருந்த போதிலும் அது பற்றியான் எதுவும் இங்கு குறிப்பிடவிரும்பவில்லை.''

இவ்வாறு திரு. சரத் விமானக் கடத்தல் குற்றச் செயல் சட்டமூலத்தின் மீதான விவாதத்தில் பேசுகையில் கூறினார். [ம]

பளை கோஷ்டி மோதல்

## 4-வது நபர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

பளைப்பகுதியில் இருகோஷ்டிகளிடையே ஏற்பட்ட மோதலில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்த எம். தனபாலசிங்கம் மரணமானார்.

இவரது சடலத்தைப் பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரி, இறந்தவரின் உடலில் 2 துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்று தெரிவித்தார்.

மரணவிசாரணை நடாத்திய பதில் நீதவான் திரு. எஸ். பிரான்சிஸ், இறந்தவரின் மனைவி, பிள்ளைகள் விசாரணையின்போது சமுகமளிக்காததால், சடலத்தை இறந்தவரது தாயாரிடம் ஒப்படைக்கும்படியும், விசாரணைகளை தொடர்ந்து பொலிசாரை நடாத்தும்படியும் உத்தரவிட்டு, தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

இறந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதினத்திலிருந்து மயக்கநிலையில் இருந்ததால் அவரது முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவில்லையாம்.

இக்கோஷ்டிக் கலவரத்தின் போது மூவர் படுகொலைசெய்யப்பட்டது தெரிந்ததே. (மா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய இசுசு ELF 250 அலுமினியம் முழுபொடி மாத்திரம் பாதுகாப்பான பூட்டு வசதிகளுடன் விற்பனைக்குண்டு. ராஜன் பொடி பில்டர்ஸ், கந்துவில் ஒழுங்கை, சாவகச்சேரி 3933

பதிவு செய்யப்படாத புனரமைக்கப்பெற்ற Isuzu–ELF150 15 சீற் கைறூவ் 1979 மொடல் வானும் C/90 ஹொண்டா மோட்டார் சைக்கிள் களும் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3930

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பண்டியன்தாழ்வு வீதியில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய மூன்று பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. பகிர்ந்தும் கொடுக்கப்படும். தொடர்பு எஸ். செபஸ்தியாம்பிள்ளை, உஷா கம்பனி, 136, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 3948

ஊரெழு பிரதான பலாலி வீதியில் புதிய கிணற்றுடன் வீடு, தொழிற்சாலை அமைப்பதற்குசுந்த நல்ல சுற்றுடலில் ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் 7 பரப்பு விவசாயக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தருமலிங்கம் தருமதுரை, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 3950

இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்கள், பெல், பூட்டு, பக்கஸ்ராண்ட், கரியர், இன்பிலேற்றர் மற்றும் உதிரிப்பாகங்களுடன் விற்பனைக்குண்டு. விலை ரூ 975/– ஓட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3952

கோப்பாய் பருத்தித்துறை வீதியில் பூதர்மடத்தடியில் 12 பரப்பு தேட்டக்காணி விற்கப்படும் குடியிருப்புக்கும் ஏற்ற இடம். இரு கிணறுகளுடன் சகலவசதியுமுண்டு தொடர்பு: நியூ துர்க்கா ட்றேடேர்ஸ், திருநெல்வேலிச் சந்தி, சந்திக்கும் நேரம்: பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை. 3956

நல்ல நிலையில் உள்ள ஸ்ரீ 9511 ஹோல்டன் மோட்டார் வாகனம் விற்பனைக்கு உண்டு 11, பழைய பூங்கா வீதி, (Old park Road) யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 3939

## FOR SALE

DEVTZ to KVA GENERATOR. Excellent condition. Available for inspection at ANDRIESZ and CO. LTD. Kandy Road. Navatkuli, Kaithadi. 3947

## WANTED

For immediate employment a clerk with experience to handle Salaries, Wages and E.P.F. etc. Should be able to read and converse in English. Knowledge of Sinhala an additional qualification Minimum Qualifications G.C.E. (O/L) with Credit Passes in English and Arithmetic and Mathametics. Apply: Director Finance, ANDRIESZ and CO. LTD., Kandy Road Navatkuli, Kaithadi. 3946

## தவறிவிட்டது

மோட்டோர் சைக்கிள் ட்ரைவிங் லைசென்சுக்கான விண்ணப்பப்படிவம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதிலுள்ள விலாசத்திலோ அல்லது கீழ்க்காணும் முகவரியிலோ ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். S. துரைசாமி, 58, மானிப்பாய் ரேட், யாழ்ப்பாணம். 3960

## பயிற்சி

வெல்டிங் வயறிங் மோட்டார் மெக்கானிசம்செய்முறை அறிமுறையுடன் புதிய வகுப்புக்கள் (24-07-82) இல் ஆரம்பம். பயிற்சிக் காலத்தில் பல சலுகைகள் உண்டு. விபரங்கட்கு: C. E. T. ஐலண்ட் இன்ஸ்ரிரியூட், (சிகாரைக்கு எதிரில்) 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 3941

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல. 84அ–பிரிவுகள்524,532]

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்றபரமேஸ்வரி சண்முகலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில், பரமேஸ்வரி சண்முகலிங்கம்

மரணமெய்தியவர்

தாமோதரம்பிள்ளை சண்முகலிங்கம் – இமையாணன், உடுப்பிட்டி.

மனுதார்.

மரணசாதன ] நியாயாதிக்கம்] இல. 1138T

1. செல்வி சியாமளா சண்முகலிங்கம் பராயமற்றவர்
2. உதயசங்கர் சண்முகலிங்கம் –பராயமற்றவர் இமையாணன், உடுப்பிட்டி.
3. தாமோதரம்பிள்ளை மயில்வாகனம் –இயற்றாலை வரணி.

–பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ம் ஆம்ஆண்டு ஆனி மாதம் 25ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதி மன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
கே. செல்வராஜா,
பதிவாளர்.

வரைவு
பொ. குமாரசாமி,
மனுதார் சட்டத்தரணி.

1982 ஆம் ஆண்டு ஆனி மாதம் 8ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
15–7–82

காரணம் காட்டும் தவணை 30–7–82க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கே. செல்வராஜா,
பதிவாளர்.
3954

★ 1980 வேலை நிறுத்தத்தில்

# வடக்கில் பதவி இழந்த 15 ஆசிரியர்க்கு மீண்டும்வேலை!

[யாழ்ப்பாணம்]

80ம் ஆண்டு ஜூலை வேலை நிறுத்தத்தினால் பதவி இழந்த வட மாநிலத்தைச் சேர்ந்த 15 ஆசிரியர்களுக்கும் மீண்டும் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இவ் வேலை நிறுத்தத்தினால் வேலை இழந்த வடமாநிலத்தைச் சேர்ந்த கூட்டுத்தாபன, அரசாங்க ஊழியர்கள் பலருக்கு ஏற்கனவே மீண்டும் வேலை வழங்கிய போதிலும் ஆசிரியர்கள் எவருக்கும் இதுவரை வேலை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

(7–ம் பக்கம் பார்க்க)

## யாழ். வைமன் இந்து நடத்தும் சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைமன்இந்து இளைஞர் இயக்கம், நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு நடாத்தும் சைவசமய அறிவுப் போட்டியைவழமைபோல் இவ்வாண்டும் நடாத்துகின்றது.

சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்குத் தங்கப்பதக்கம் உட்பட 1 பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி இந்து இயக்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் புதிய நிர்வாகத்தினராகத் தெரிவு பெற்றோர் விபரம் வருமாறு:

போஷகர்கள் திருவாளர்கள் ஸி. வாமதேவா, எஸ். பரமசாமி, ஜே. செல்லையா. தலைவர் திரு. ஏ. ஸ்ரீபத்மநாதன், செயலாளர் திரு ஏ. ஸ்ரீசற்குணம். பொருளாளர் திரு எஸ். ரவிசங்கர். உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. நகுலேந்திரன். கே விஜேந்திரன, எம். தர்மானந்தன்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சப்பரத் திருவிழா அன்று இரவும் தேர்த்திருவிழா அன்று பகலும் தீர்த்தத் திருவிழா அன்றும் வைமன் இந்து இளைஞர் இயக்கம் வைமனவீதியில் நடாத்தும் தண்ணீர்ப் பந்தலில் மாகேசுர பூசை நடைபெறும்.

தீர்த்தத் திருவிழா அன்று இரவு 7 மணிக்கு சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

## அறிவித்தல்
### மின்தடை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுள், சில வட்டாரங்களின் பாவனையாளர்களுக்கு 19–07–1982ஆம்திகதி சிலமணி நேரங்கள் இரவிலும், 20–07–1982–ஆம் திகதி காலையில் இருமணி நேரமும் மின்சாரத்தடை ஏற்பட்டமைக்காக இம் மன்றம் மிகவும் வருந்துகின்றது.

ஒட்டுமடம் வீதியில் இருக்கும் இலங்கை மின்சாரசபைக்குச் சொந்தமான மின் பிறப்பாக்கி எரிந்துபோனமையால், மின் தடையை ஏற்படுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டதாக இலங்கை மின்சாரசபையினர் இம்மன்றத்துக்கு அறிவித்திருக்கின்றனர் என்பதையும் மின்தடை இம்மன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது என்பதையும் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன். ஆகவே, மின் நுகர்வோர் மாலை 6–00 மணி முதல் இரவு 9–00 மணி வரையும் தமது நுகர்வைக் கூடிய வரை குறைத்துக் கொள்ளுமாறு பணிவாக வேண்டப்படுகின்றனர்.

சீ. வீ. கே. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சிமன்றம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்:
20–7–1982. 3944


உடன் விற்பனைக்கு

**Izusu E. L. F. 350 Goods Van**

எம்மால் யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

முகவரி:

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி - யாழ்ப்பாணம்
3931

# WANTED

Tree Climbers who can work on high buildings in Saudi Arabia. Must be strong and of good build. Come with Passport to:

CONSTRUCTION AND DEVELOPMENT CO. LTD
37, S. DE. S. Jayasinghe Mawatha,
Nugegoda.
Labour Licence No. 96 (3951)


சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்
### நவீன சந்தைக் கடைகள்

சாவகச்சேரி நவீன சந்தையில் மிகுதியாக இருக்கும் கீழே காட்டப்பட்டுள்ள கடைகளுக்குச் சமர்ப்பிக்கப்படும் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 06–8–82–ம் திகதி நண்பகல் 12–00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்காக இந்த அலுவலகத்தில் வழங்கப்படும் படிவத்திலேயே கேள்விகள் அனுப்பப்படவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் மீளளிப்புச்செய்யப்படாத கேள்விப் பத்திரக்கட்டணமாக ரூபா 50/–ம் மீளளிப்புச்செய்யப்படும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 500/ ம் 05–8–82–ம திகதி 12–00 மணிக்குமுன் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

| கடையின் விபரம் | கடையின் தொகை | ஒரு கடையின் ஆகக் குறைந்த முற்பணம் |
|---|---|---|
| 1. மேல் மாடி— கண்டி வீதிப்பக்கம் | 3 | ரூ. 20,000/– |

இதுபற்றிய மேல் விபரங்கள் இக்காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
15–7–1982. 3953

## 4-வது நினைவாஞ்சலி

மகேசன் நிருக்குமார்



தோற்றம்: 16-9-70

மறைவு: 23-7-78

அன்புக்குமரா நீ எங்குதான் மறைந்திருந்தாலும் உன் அன்புருவம் எங்களைவிட்டு அகன்றதே இல்லை செல்வமே– உன்னை நினையாத நேரம் இல்லை. எங்கிருந்தாலும் வாழ்க கண்ணே. உன் ஆன்மா சாந்தி அடையட்டும். உன்னை திருமுருகனின் அன்புக் சரங்களில் வைத்துவிட்டோம். உனக்கு எக்குறையும் இல்லை

ஓம் சாந்தி ஓம் சாந்தி.

உன்னை என்றும் மறவாத அம்மா, அப்பா, அக்கா பபா அருள் மற்றும் உன் அன்புக்குரியோர்.

6, இராணி வீதி, நல்லூர். 3957

பாலஸ்தீன விடுதலை இயக்கம்

# இஸ்ரேலை அங்கீகரித்தால் அமெரிக்கா பேச்சுநடத்தும்!

லண்டன், ஜூலை,22

இஸ்ரேலுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் திட்டவட்டமான அங்கீகாரத்தை அளித்தால் அதனுடன் அமெரிக்காபேச்சுவார்த்தை நடத்தும் என அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பாதுகாப்பு எல்லையை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலை, பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் அங்கீகரித்தால், அமெரிக்கா பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெய்ரூட்டிலுள்ள பாலஸ்தீனிய படைகளை வெளியேற்ற அமெரிக்கா உடனடியாக உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்,

இதேசமயம், லெபனன் பிரச்னை இரண்டு அல்லது மூன்று வார காலத்தில் தீர்க்கப்படும் என்று இஸ்ரேலியப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

பெய்ரூட்டிலிருந்து பாலஸ்தீனியர் வெளியேற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முட்டுக்கட்டை நிலை தொடர்ந்து இருக்குமானல் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீனியர்மீது இராணுவத்தாக்குதல் நடைபெறுவது தவிர்க்க முடியாததொன்று என இஸ்ரேல் அதிகாரிஒருவர் தெரிவித்தார். [க]

யாழ். மாவட்டத்திற்கு

# 17 ஆசிரியர்கள் மீண்டும்இடமாற்றம்

[கரவெட்டி]

அண்மையில் கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆசிரியர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறி வெளி மாவட்டங்களுக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்களில் 17 பேர் யாழ். மாவட்டத்திற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 17 ஆசிரியர்களுக்கே இந்த அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

இவ் வருடம் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற புதிய ஆசிரியர் நியமனங்கள், இடமாற்றங்கள் மூலம் 650 ஆசிரியர்கள் இம் மாவட்டத்திற்கு வந்தள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலவச சிகிச்சை

சென்னை ஜூலை.22

லயன்ஸ் கழக வெள்ளி விழாவையொட்டி தமிழ் நாட்டில் 6மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் இலவச கண் கிகிச்சையளிக்கப்படும். 100 நிலையங்களில் 5000 பேருக்குக் கண் அறுவை சிகிச்சையளிக்கப்படும். [ச]

## கூட்டங்களுக்கு தடை

சென்னை ஜூலை.22

ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்தக்கூடாதென தூத்துக்குடியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 19-ம் தேதி முதல் அமுலிலிருக்கும் இந்த உத்தரவு 15 நாள்வரை நீடிக்கும். (க)

முன்னாள்

## ராஷ்டிரபதிக்கு பிரியாவிடை

சென்னை ஜூலை.22

முன்னாள் பாரத ராஷ்டிரபதி திரு. சஞ்சீவ ரெட்டிக்கு, பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராட்டி வடையளித்தார்கள். அவர்கள் ஞாபகச் சின்னமொன்றையும் அவருக்கு வழங்கினார்கள்.

இந்தபிரியாவிடை வைபவத்தில் அவர் பேசும் போது 'நான் இனி அரசியலில் ஈடுபடப் போவதில்லை, என்று தெரிவித்தார். [க]

# முன்னாள் நேபாள பிரதமர்காலமானார்

புதுடில்லி, ஜூலை, 22

நேபாள முன்னாள் பிரதமர் பி. வி. கோய்ரால் நேற்றுக் காலமானார். 67 வயதான இவர் கடும் சுகவீனமுற்றிருந்தார். 1959-ம் ஆண்டு நடந்த முதலாவது பொதுத் தேர்தலில் இவரது கட்சி 75 வீத வாக்குகளைப் பெற்று இவர் பிரதமரானார்.

1976-ல் தேசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் இவர் கைதுசெய்யப்பட்டார். கடும் சுகவீனமுற்றிருந்ததால், சிகிச்சைபெறுவதற்காக இவர் அமெரிக்கா செல்ல அனுமதிக்கப்பட்டார். இவர் நேபாள காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினரில் ஒருவராவர். [க]

## மீனவர் திரும்பினர்

புதுடில்லி. ஜூலை 22

வட எல்லைப் பிரிவில் காணமல் போன 64 மீனவர் திரும்பியுள்ளார்கள். எனக் கடல் இலாகா அதிகாரி தெரிவித்தள்ளார். [க]

## திருட்டு

[கரவெட்டி]

அச்சுதேவலி—வசா விளான் வீதியில் 2,000 ரூபா பெறுமதியான தர்திக் கம்பிகள் இரவு வேளை திருடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

# சிங்கள பல மண்டலய கூட்டத்தில் அடிதடி,குழப்பம்!

## பிக்கு ஒருவரும் தாக்குண்டார்!!

[கொழும்பு]

சிங்கள பல மண்டலய நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய கூட்டத்தில் அடிதடி, குழப்பம் ஏற்பட்டதை அடுத்து மூவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பிக்கு.

கூட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் வெளியிலிருந்து வந்த ஒரு கூட்டத்தினர் கூட்டத்தில் பொருளாதாரம் சம்பந்தமான கேள்விகளைக் கேட்டதை அடுத்து மோதல் இடம் பெற்று கூட்டத்தை தொடர்ந்து நடத்தமுடியாத நிலையில் இடையில் நிறுத்தப்பட்டது.

வெள்ளவத்தை பௌத்த லோக மாவத்தையில் உள்ள பௌத்த சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே குழப்பம் ஏற்பட்டு தளபாடங்கள், கட்டிடம் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டனவாம்.

பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்றே குழப்பத்தைக் கட்டுப்படுத்தினர். [இ]

பாரத ராஷ்டிரபதி

## பதவியேற்பு வைபவம்

சென்னை ஜூலை 22

பாரத ராஷ்டிரபதி திரு. ஸெயில் சிங் பதவி ஏற்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இவ் வைபவம் 80 நிமிடங்கள் இடம் பெறும். [க]

உண்ணுவிரதமிருந்த

# 14 மாணவர்கள் கைதாகிவிடுதலை!

சென்னை, ஜூலை, 22

காலவரையறையின்றி உண்ணுவிரதம் மேற்கொண்ட சென்னை பச்சையப்பன்கல்லூரியைச் சேர்ந்த 14 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னையில் அமுலிலிருந்த தடைஉத்தரவை மீறி இவர்கள் உண்ணுவிரதம் இருந்ததாகக்கைதுசெய்யப்பட்டனர். பச்சையப்பன் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்ட 9 மாணவர்களை மீண்டும்சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பாரத மாணவர் சம்மேளனம் இந்த உண்ணுவிரதத்திற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது. [க]

# அணு ஆயுத உற்பத்தி நிதி: காங்கிரஸ் அங்கீகாரம்!

வாஷிங்டன், ஜூலை, 22

அணுஆயுத உற்பத்திக்காக அமெரிக்க ஜனாதிபதி றீகன் 17,000 கோடிடொலர் நிதியை அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரித்துள்ளது.

பாதுகாப்புத் தேவைக்கு அணுஆயுதத்தேவைஎன அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. 3 வாக்கு வித்தியாசத்தில் இத்தீர்மானம் நிறைவேறியது. இந்நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 212 வாக்குகளும், எதிராக 209 வாக்குகளும் கிடைத்து தீர்மானம் நிறைவேறியது. [க]

## மோதலில் ஐந்து பேர் காயம்

சென்னை ஜூலை.22

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாங்குடி என்றகிராமத்தில் ஏற்பட்ட மோதலில் 5 பேர் படுகாயமடைந்தனர். இச் சம்பவம் தொடர்பாக ஏழு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை இராமநாதபுரம் கிழக்கு பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. எஸ். இராமலிங்கம் தெரிவித்தார். [க]

## பெண் பொலிஸ் நியமனம்

சென்னை. ஜூலை 22.

திருச்சி மாவட்டத்திலுள 10 பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிசார் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் ஒரு பெண் இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக்கான்ஸ்டபிள், 10 பெண் கான்ஸ்டபிள்க்ள் நியமிக்கப்பட்டுள்ளனர். [க]

## ரஷ்யாவில் பாரதி விழா

புதுடில்லி. ஜூலை. 22

மகாகவி சுப்பிரமணியபாரதியாரின் நூற்றாண்டு விழா ரஷ்யாவில் கொண்டாடப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. பாரதியார் அக்டோபர் புரட்சியை வரவேற்றுப் பாடியுள்ளதுடன், தலைவர் லெனின் பற்றியும் பாடியுள்ளார். [க]

கடமையின் போது உயிரிழக்கும்

# பொலிஸாரின் சம்பளம் தொடர்ந்து வழங்கப்படும்!

## 55 வயதிற்குபின் ஒய்வூதியம் உண்டு

(கொழும்பு)

கடமையின்போது உயிரிழக்கும் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தவருக்கு மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரின் 55 வயதுவரை சம்பளமும் 55 வயதுக்குப்பின் ஒய்வூதியமும் வழங்குவதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது,

இவற்றுடன்ஏனைய பொலிஸ் உத்தியோகத்தருக்கு கடமையின்போது வழங்கப்படும் நன்மைகளும் வழங்கப்படும்.

ஜனாதிபதியின் இந்த ஆலோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. [இ]

பண்டத்தரிப்பு

## ப. நோ. கூ. சங்க புதிய தலைவர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக ஆசிரியர் திரு. வி. சேனாதிராசா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ். கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். நடராஜா தலைமையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது சங்க உப தலைவராக மாதகல் கிராம சேவை அலுவலர் திரு. எஸ். பிரான்சிஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

## வீதி திருத்தம் ரூபா 20 லட்சம்

(கொழும்பு)

கண்டி மாநகர வீதிகளைத் திருத்துவதிற்கு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா 20 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.

கண்டி நகர முதல்வர் திரு. திலகரத்னவும் உறுப்பினர்களும். பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இந்நிதி ஒதுக்கப்பட்டது.

கடந்த காலத்தில்வீதி திருத்தத்திற்கு எந்த ஒரு அரசும் இப்படி நிதி வழங்கவில்லையென்றும் வீதிகள் நல்ல முறையில் திருத்தி அமைக்கப்படுமென்றும் கண்டி முதல்வர் தெரிவித்தார். [க]

### மணிவாக்கு

ஆன்மாக்கள் ஆணவமென்னும் நோயினற் பிடிக்கப்பட்ட நோயாளிகள்; கடவுள் அந்த நோயைத் தீர்க்கும் வைத்தியநாதர் என்று சொல்வது சைவசமயம்.

—சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்

# நமது நோக்கு

## கோயில் திருவிழாக்கள்

'கோயிலில்லா ஊரில் குடியிருக்கலாகாது' என்ற ஆன்ரோர் வாசகத்துக்கமைய தமிழர்கள்– சைவர்கள் வாழும் இடமெல்லாம் நம் முன்னோர் புகழ்வாய்ந்த ஆலயங்களை அமைத்திருக்கின்றனர்.

மனத்தை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியினும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு.

''திருக்கோயில் வலம் வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினற் பயனில்லை'' என்ருர் திருநாவுக்கரசு நாயனுர். ''கடவுளுடைய திருவடிகளைத்தொழுதற்கு உதவியாகாத கல்வியினுற் பயனில்லை'' என்ருர் திருவள்ளுவநாயனுர்.

சாதாரண சைவமக்களுக்கு இவற்றை நாம் நினைவூட்டும் அவசியம் இராது. ஆனல் இன்று பல பிரபல கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இக்காலமே கோயில் திருவிழாக்களுக்கு உகந்தகாலமென்பது முக்கியகாரணம்.

எங்கள் நாட்டின் இன்றைய வரலாற்றில் தமிழ் மக்கள், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் அமைதியின்றி வாழ்கின்றனர். சென்ற ஆண்டில் இங்கு நடைபெற்ற அசம்பாவிதச் சம்பவங்களின் எதிரொலி இன்றும் கேட்டவண்ணமே இருக்கின்றது.

பக்தகோடிகள் திருவிழாக் காலத்தில் விரதமிருந்து ஆண்டவனை அவர் எழுந்தருளியிருக்கும் கோயிலில்– விசேடதினங்களாகிய திருவிழாக்களில் தரிசனஞ்செய்வது என்றுமே குன்ருத வழக்கம்.

இந்தப் புண்ணிய செயலுக்கு நாட்டின் காவற்படையினர் உதவி தேடவோ, கள்ளர்களின் நடமாட்டத்துக்குரிய அச்சத்தால் மனநிம்மதி இழக்கவோ நேரிடுமானல் அது குளிக்கப்போய் சேற்றைப் பூசும் செயலாகும்.

சனக்கூட்டம் சனநெரிசல் என்று சொல்லும் போது, பக்தர்கள் கூட்டம் என்று கருதப்படுவது மிகத் தவறு.

திருவிழாக் காலங்களில் வேடிக்கை பார்க்க வருபவரை நாம் தடுக்கவோ, தண்டிக்கவோ இயலாது; ஆனல் அவர்களைத்தவிர்ப்பதில் அடியார்கள் ஒருமனப்பட்டால் கோயில் சுற்ருடல் மிக அமைதியுடன் மிளிரும்.

மாணவ சாரணர்கள் இந்த நன்முயற்சியில் ஈடுபடுவதும், அதற்கேற்ற முறையில் கோயில் அதிகாரிகள் ஒத்துழைப்பதும் செவ்வனே நிர்வகிக்கப்படும் கோயில்களில் நாமகாணும் அழகான காட்சி. இது எல்லாக் கோயில்களுக்கும் பரவ வேண்டும்.

அன்று அமைக்கப்பட்ட கோயில்கள், கட்டிடங்கள், மண்டபங்கள், வெளிவீதிகள் இன்று பெருகிவரும் மக்கள் கூட்டத்துக்கு ஈடு செய்யமுடியாத இக்கட்டான நிலையை ஏற்படுத்திவருகின்றன.

எனவே அடியார்களின் பொறுப்பு எத்தகையது என்று கற்பனை செய்வது கடினமல்ல; ஆனல் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு கட்டுப்பாடான ஒழுக்கம் மிகமிக அவசியமானது.

கோயிலுக்குப் போகும் நோக்கத்தை மறப்பதற்கு அங்கு ஆயிரக்கணக்கான அனுவசியநிகழ்ச்சிகள் இடம்பெறுவது நாமெல்லோரும் அறிந்ததே.

எனவே இவ்விசேட உற்சவ காலங்களில் பகலிலும் இரவிலும் கண்டிப்பாக நாம் வழிபாட்டின் உண்மை நோக்கை உணர்ந்து நடப்பது இன்றியமையாதது.

கோயிலில் இறைவன் திருமேனியை மூர்த்தத்தை உயிரோவியமாகக் கொள்ளுதல் உண்மை உணரப்பெற்ரோர்க்கெல்லாம் உடன்பாடாகும்.

இந்த உயிரோவியத்தை உற்றுநோக்கும்சுவர்ச்சிகளை எங்கள் சிறந்த கோயில்கள் விதிப்படி அமைத்திருப்பது எங்கள் பாக்கியமே!

அனைவருக்கும் தலைவனை இறைவன் திருவிழாக்காலங்களில் எழுந்தருளும் காட்சியை மேனாட்டு மக்கள் கூட்டு தரிசிக்க அங்கணம் கட்டுகின்றனர்.

அத்தகைய இறைவன் தன் அருட்கண்ணுல்நோக்குவானுனல் மக்களுக்குத் துன்பம் நேரிட நியாயமில்லை; நேரிடும் துன்பத்துக்கு நிவாரணமும் அவனே!

எனவே கோயில்களில் எந்த அசம்பாவிதங்களும் நடைபெருமல் காப்பது அடியார்களின் சமுதாயக் கடன். சாதாரண தினங்களில் கடவுள் வழிபாடு ஒரு வகையது, திருவிழாக் காலங்களில் – அவற்றிலும் அழகில்விசேடமான விழாக் காலங்களில்பெருந்திரளான மக்கள் மத்தியில், ஒன்றுபட்ட தரிசனம் மிகச்சுவையானது.

இந்த வேளைகளில் 'எனது கடவுள் எனக்கே' என்ற விளக்கமற்ற தவருன மனப்போக்கு மற்றும் அடியார்களுக்கு இடர்விளைவிக்கும்.

யாழ்ப்பாணம் பெரியகடையில் இன்று அடிக்கடி இடம்பெறும் 'கிலி' ஊட்டும் சம்பவங்கள் எங்கள் பண்பை நாளந்தம் அழித்துவருகிறது.

காவற்படையினர் கையாளும் அடக்குமுறைகள் கோயில் சுற்ருடலில் இடம்பெருது காப்பது ஒவ்வொரு சைவனின் தலையாய கடன்.

நாமிவ்வாறு நீளமாய் நினைவூட்ட போதிய காரணம் உண்டு.

உண்மையான வழிபாடற்ற இன்றைய காலத்தில் கோயில்களில் வாய்ப்பு உண்டா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். உடனே திகைப்பு ஏற்படும். மாலை, தேங்காய், பழம், அர்ச்சனை ரிக்கற் ஆரவாரம் போன்ற குழப்ப நிலைகு நிலைக்களனய்த் திகழும் கோயில்களுக்கு இறைவனே துணை புரிய வேண்டும்!

மனித சாமர்த்தியத்தால் இறைவனின் ஆசிபெற்று நிர்வகிக்கப்படும் கோயில்கள் இல்லாமலில்லை; அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய கோயில்களும் திவ்விய தலங்களாகத் திகழ முன்வரவேண்டும்.

## யாழ்ப்பாணத்துப்பொதுசன நூல்நிலையம்-4

# நூல்நிலையச்சபையின் பழைய பெயர்

**க.சி. குலரத்தினம்**

திருவாளர் க. மு. செல்லப்பா அவர்கள் விடாமுயற்சியால் உருவான நூல்நிலையச் சபையின் பழையபெயர், மத்திய இலவச தமிழ் வாசிகசாலைச் சங்கம் யாழ்ப்பாணம் என்பதாகும்

இச்சங்கத்தின் நோக்கங்கள் அவர் அறிக்கையில் கண்டவண்ணம் ஆறுபடித்தாயமைந்துள்ளன.

1 தமிழ்க் கல்வியை மறுமலர்ச்சிசெய்து ஊக்கப்படுத்தி வளர்த்தல்.

2 பொதுமக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்தல்..

3. பழைய ஓலைச்சுவடிகளான ஏடுகளை விலைகொடுத்து வாங்கிப் பக்குவப்படுத்திப் பயன் செய்தல்.

4. தமிழ்மொழி சம்பந்தமான ஆராய்ச்சி முயற்சிகளை ஊக்கப்படுத்தி வசதி வாய்ப்பு நலகுதல்.

5 தமிழ் மொழியிலுள்ள நூல்களை வேறுமொழிகளில் பெயர்த்து எழுதியும், வேறு மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் பெயர்த்தும் எழுதியும் பயன் செய்தல்.

6. யாழ்ப்பாணத்தில் ஒரு மத்திய இலவச தமிழ் நூலகத்தையும் வாசிகசாலையையும் அமைத்து நடத்துதல். நூலகம் உடனுதவும் தன்மையில் பிரதானமாகத் தமிழ் நூல்களைக் கொண்டதாயும், ஓரளவுக்கு ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், பாளி நூல்களைக் கொண்டதாயும் இயங்குதல்.

### அங்கத்துவம்

இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட சகல ஆண், பெண் இருபாலாரும் மாதம் இருபத்தைந்துசதம் செலுத்தி அங்கத்தவராயிருந்து பயன் பெறலாம்.

### முகாமைக்குழு

தலைவர், உப தலைவருள் இருவர், இணைச்செயலாளர், தனதிகாரிகள், இன்னும் பன்னிரு தெரியப்பெற்ற சபையினர் நூலக வாசிகசாலை முகாமையாளராயிருப்பர்.

இவ்வாறமைந்த பிரமாணங்களோடு இன்னும் பல உப விதிகள் அமைந்த ஒழுக்கமான யாப்பு நூலக வாசிகசாலைப் பரிபாலனத்துக்குத் தொகுக்கப் பெற்றுப் படித்து நிறைவேற்றப்பெற்றது. காரிய நிர்வாக சபையினர் அனுமதியின் வண்ணம் 1000 பிரதிகள் அச்சடிக்கப்பெற்றன.

### புத்தகங்கள் வந்து சேர்ந்தன

நேர்மையும், நிர்வாகத் திறமையும் கனிவான பேச்சும், நல்ல பண்பாடும் உள்ள செல்லப்பா அவர்களைச் சைவர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் எல்லோரும் வெகுவாக விரும்பினர். அவர் வேண்டுகோள் விடுத்தும் பலர் தங்கள் வீட்டில் தமக்குப் பயன்படாது கிடந்த பழைய புராணேதிகாசப் பெருநூல்களை நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்தனர். அன்பளிப்புச் செய்த முன்னேடிகளுள், நல்லூர் வித்தியாதரிசி கந்தையா அவர்கள் நாயன்மார்க்கட்டு வைத்தியர் இராமநாதன் அவர்கள், வணக்கத்துக்குரிய கலாநிதி ஐசாக் தம்பையா அவர்கள் முதலில் உதவினர். இவர்களைத் தொடர்ந்து உதவிய பெருமக்கள் பலர் அரியபல நூல்களை உதவியுள்ளார்கள். அவர்களின் பெயர்கள் அடுத்த கட்டுரையில் இடம்பெறும்.

### புத்தகங்கள் சேகரித்த தொண்டர்கள்

நல்லமனம்படைத்த பெரியவர்களின் வீடுகள் தாறும் சென்று ஒரு புத்தகமாவது பெற்று வருவதற்கு அக்காலத்தில் இளைஞராயிருந்த அத்தியடி இ. கேதீஸ்வரநாதன், வைமன்வீதி செ. கனகசபை, குமாரசுவாமி வீதி அ. சண்முகநாதன், அட்பன்வீதி க. சி குலரத்தினம் முதலானோர் எடுபிடி வேலைகள் செய்து இலவசமாக நூல்களை வாசித்துப்பயனடைந்தார்கள்.

### ஆரம்பகால நூலகர்

நூலகப்பயிற்சி நெறியேயறியாத இளைஞன் ஒருவர் தமிழ் ஆங்கிலம் நன்ருகப்படித்தவர் அன்னசத்திர ஒழுங்கையில் வாழ்ந்த சி. எஸ். இராசரத்தினம் என்பார், வந்துகுவிந்த நூல்களைத் தூசுதட்டித் துடைத்து உறையிட்டுச் செம்மைப்படுத்திப்பட்டியல் தயாரித்துப்பக்குவப்படுத்திவைத்து வந்தார்.

[தொடரும்]

# தேர் ஏறிவரும் அன்னை இராஜேஸ்வரி

**-- சிவத்திரு க. சிவபாதசுந்தர குருக்கள் --**

நாவல்லவர் வாழும் நாயன்மார்க்கட்டுப் பதியிலே புராதன காலம் தொட்டு கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துவரும் அன்னை இராஜேஸ்வரிதேவி இன்று இரதத்தில் ஆரோகணித்து திருவீதி உலம் வருகிருள். அன்னை தேர் ஏறிவருவது அடியார்களாகிய எங்களது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்து இரட்சிக்கும் நோக்கமாகும். இது சங்கார கிருத்தியம் எனக் கூறுப்படும்.

இந்த நாயன்மார்க்கட்டுப் பதியிலே வாழும் மக்கள் அன்னையின் இப்பெரு விழாவை மிகக் கொண்டாடி வருகிருர்கள். இத் தேர் விழா மாத்திரமன்றி, இதற்கு அடுத்தநாள் நடைபெறும் பூரகர்மஉற்சவம் (ருது சோபன விழா) மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டுவருகிறது. ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திர தினத்தில் அன்னை ருது வாகியதாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆதலினுல் அன்னைக்கு அத்தினத்தில் ருது சோபன விழா நடத்திவருகிருர்கள். அன்னைக்கு வருடம் தோறும் மேற்படி குறித்த தினத்தில் பூரகர்மமாகிய மங்கள விழா எடுப்பதினுலே அடியார்களாகிய நாங்களும் வருடம் தோறும் சகல மங்களங்களும் பெற்று வாழுவோம் என்பது திண்ணமாகும். இதையடுத்து அன்னைக்கு தீர்த்தவிழா நடைபெறும். அதாவது அன்னையின் திருவருள் பிரவாகத்தில் ஆன்மாக்கள்! எல்லாம்திளைத்து அவளது அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வதென்பது இத்தீர்த்தவிழாவின் நோக்கமாகும். இதன்பின்னர் நடைபெறும் திருஊஞ்சல். கொடி இறக்கவிழா சண்டேஸ்வரி விழா, ஆசாரியர்விழா ஆகியவற்ருேடு வருட மகோற்சவம் நிறைவுபெறுகிறது.

யாழ் குடாநாட்டில் நாயன்மார்கட்டுப் பதியிலே உள்ள இவ்வாலயம் மிகக் குறுகிய காலத்திலே வளர்ச்சியடைந்துள்ளது. தற்போதும் இந்த ஆலயத்தை பரிபாலன சபையினர் பரிபாலித்து வருகிருர்கள். கடந்த இரண்டு வருட

[8–ம் பக்கம் பார்க்க

# மக்கள் கருத்து

## கிளிநொச்சித் தொகுதியின் பிரச்னைகள்

கிளிநொசசி கனகாம்பிகைகுளம் புதப்பாலம் இன்று யாழ்ப்பாண மாவட்டஅமைச்சரால் திறந்துவைக்கப்படுகிறது. இவ் வைபவத்தில் மாவட்ட அபிவிருத்திசபை தலைவரும் கலந்துகொள்ளவுள்ளார்.

வேலைவாய்ப்பில் இத்தொகுதி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஆசிரியர் பற்ருக்குறையும் பாரிய பிரச்னையாக உள்ளது. அத்துமீறி குடியேறியோரின் பிரச்னையும் தீர்ந்தபாடில்லை. மாவட்ட சபையில் இத்தொகுயிலிருந்து வெற்றிபெற்ற இடம் இதுவரை கிடைக்கவில்லை. இத் துர்ப்பாக்கியநிலை தொடர்ந்து இடம்பெற சம்பந்தப்பட்டவர்கள் இடமளிக்கக்கூடாது.

ஞா. அருமைநாயகம்.
செயலாளர்
தமிழர்விடுதலைக்கூட்டணி
பரந்தன் கிளை

## கதிர்காம புராணம்

விண்ணவர் இயக்கர் சித்தர்
விஞ்சையர் கருடர்நாகர்
மண்ணவரெவரும் போற்றி
வழிபட அன்னோர்க்கெல்லாம்
எண்ணிய வரங்கள் ஈந்தே
எண்ணில அற்புதங்கள் செய்து
புண்ணியக் கதிரை வாளும்
புங்கவன் பாதம் போற்றி

வித்துவான் - சி. நாகலிங்கம்பிள்ளை

# சிறப்புமிகு ஈகைத்திருநாளாம் "ஈதுல் பித்ர்"

பரக்கத் செய்யப்பட்ட ஆத்ம பிரயாணத்திலிருந்து நோன்பாளிகள் திரும்பி விடுவது பற்றி அறிவித்தும் புனித திருநாளாம் ஈதுல் பித்ர் வந்துவிட்டதை முன்னிட்டு வாழ்த்துக்கூறியும் சங்கைமிகு நோன்பு மாதம் முடிந்துவிட்டது என்பதை தெரிவித்தும் ''ஷவ்வால்'' மாதத்தில் பிறை தோன்றும் ஈதுல் பித்ர் என்னும் இந்த இனிய பெருநாள்

## மௌலவியா - சுல்பிக்கா - கௌது

இரவு வந்ததும் பெருநாள் இரவை வானுலகங்களிலே ''லைலத்துல் ஜாயிஸா'' பரிசளிக்கப்படும் இரவு என்று கூறப்படுகின்றது. இந்த நோன்புப் பெருநாளின் சுபஹ் நேரம் உதயமானதும் அல்லாஹுதஆலா மலாயிக்கத்துகளை எல்லா ஊர்களுக்கும் அனுப்பி வைக்கிறான் அவர்கள் சகல தெருக்களிலும் பாதைகளிலும் முக்கிய இடங்களில் நின்றுகொண்டு ''ஏ முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சமூகத்தினரே நீங்கள் அந்த கருணையாளனாகிய அல்லாஹ்வுடைய சன்னிதானத்தின்பால் செல்வீர்களாக இறைவன் அள்ளி அள்ளி கொடைகொடுக்கும் வள்ளலாக இருக்கின்றான் பெரிய குற்றங்களை மன்னிப்பவனும் அவனாகவே இருக்கின்றான். நீங்கள் அவனிடம் சென்று பரிசு கேளுங்கள்'' எனக் கூறுவார்கள்.

இந்த சப்தத்தை மனுஜின் வர்க்கத்தைத்தவிர சகலசிருஷ்டிகளும் கேட்கின்றார்கள் கேட்டு மகிழ்கின்றார்கள் இத்தகைய சிறப்பை இன்றைய பெருநாளாம் நன்நாளிலே அடைகிறோம். இன்றைய புனித தினத்தில் நோன்பாளிகள் தங்கள் பிரயாணத்தை முடித்துவிட்டு இப்பிரயாணத்தின் வாயிலாக தங்களுக்கும் தங்களது உற்றார் உறவினர்களுக்கும் ஏன் எல்லா மலக்குமாரர்களுக்குமே நன்மையை சம்பாதித்துக் கொள்கிறார்கள்.

இன்றைய தினம் மக்கள் தங்களது பிரயாணத்தை முடித்துக்கொண்டு மனித சுதந்திரத்தின்பால் மீண்டும் விழுகின்றனர். அப்போது அவர்கள் உண்ணுவார்கள் பருகுவார்கள் அல்லாஹ் நம்பிக்கைகொண்ட மூமின்களான தன் நல்லடியார்கட்கு ஹலால் ஆக்கியவற்றை இவர்களும் செய்து இன்பம் அனுபவிக்கின்றார்கள்.

ஈகையை வலியுறுத்தும் இத்திருநாளை எல்லாம் வல்ல அல்லாஹ் றமழான் மாதத்தின் இறுதியில் மிகவும் பொருத்தமாகவே அமைத்துள்ளான் ஏனெனின் றமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்ற செல்வந்தர்கள் ஏழை, எளியவர்களின் பசிக்கொடுமையின் தாக்கத்தை நன்கு அறிந்துகொள்கின்றனர். இதனால் அவர்களிடமுள்ள உலோபத்தன்மை மாறி ஏழைகளுக்கு நன்கு அள்ளிக்கொடுக்கும் மனப்பான்மை ஏற்படுகின்றது. மேலும் வருடம் முழுவதும் பசியால் வாடும் ஏழைஎளியவர்கள் மீது கருணையும் அனுதாபமும் ஏற்படுகிறது. தம்மிடமுள்ள செல்வத்தில் ஒரு பகுதியையாவது அவர்களுக்குக்கொடுத்து உதவ வேண்டுமென்ற நல்லெண்ணமும் ஆசையும் ஏற்படுகின்றது எனவேதான் வசதிகுறைந்த தமது உறவினர்களுக்கும் ஏழை, எளியவர்களுக்கும் வாரி வழங்கி ஈதுல்பித்ர் என்னும் ஈகைத்திருநாளை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இத்திருநாளில் ''ஸக்காத்துல் பித்ரா'' என்னும் தர்மம் கொடுப்பதை (வாஜிபு) கடமையாக்கியுள்ளான். நோன்புப் பெருநாளின் இரவுக்கும், பகலுக்கும் தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் ஏனைய முக்கிய தேவையானவைகளுக்கும் எடுத்து மீதியானவற்றை ஒருவருக்கு சுமார் இரண்டு கொத்து வீதம் அரிசி போன்ற வழக்கமான சாப்பாட்டுத் தானியங்களில் இருந்து ஸக்காத்து பெற தகுதியானவர்களுக்கு கொடுப்பது வாஜிபாகும். பெருநாள் இரவு வந்தவுடன் ஸக்காத்துல் பித்ரா பர்ளாகிடும்.

நோன்பானது வானத்திற்கும் பூமிக்குமிடையில் தடைப்பட்டு நிற்கும் ஸக்காத்தல் பித்ரா நிறைவேற்றுவதை கொண்டேயன்றி உயர்த்தப்படமாட்டாது. என நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் இந்த ஹதீஸ்மூலம் ஸக்காத்துல் பித்ராவின் மகத்துவத்தை நன்கு அறிய முடிகின்றது.

பெருநாள் அதிகாலையில் இல்லங்கள்தோறும் ''அல்லாஹு அக்பர்'' ''அல்லாஹு

[8-ம் பக்கம் பார்க்க]

அனைவருக்கும் இனிய
ரம்ழான் வாழ்த்துக்கள்!
மாற்றுக் குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
கண்ணைக் கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
நவீன டிசைன்களைத் தருவதில் முன்னணியில் நிற்பவர்கள்
● ஜப்பான் ஜுவலர்ஸ் ●
மூன்று தலைமுறையாக சேவையாற்றி வருபவர்கள்
ஜப்பான் ஜுவலர்ஸ்
**ஜப்பான் ஜுவலர்ஸ்**
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
Phone : 518

அனைவருக்கும் இனிய
ரம்ழான் வாழ்த்துக்கள்
அழகிய
✶ பவுண் நகைகள் ✶ தங்கப்பவுண்
✶ வைரங்களுக்கு
**கே. என். எம்.**
**மீருன் சாஹிப்**
தங்கப்பவுண் நகை மாளிகை
நகை வியாபாரம்
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்
போன் : 585

வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது ரம்ழான் வாழ்த்துக்கள்
**சலாம்ஸ்**
யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமான உங்கள் பொருட்களை பாதுகாப்பாக ஏற்றி இறக்குபவர்கள்
**SALAAMS**
95, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் : 7697
65, டாம் வீதி, கொழும்பு 12. போன் : 35509

அனைவருக்கும்
அன்புகலந்த ரம்ழான் வாழ்த்துக்கள்!
உங்களுக்கு வேண்டிய
நஷனல், பிலிப்ஸ், சொனி, சன்யோ
இன்னும் எந்தவகை டெலிவிஷன்களுக்கும், வீடியோ படப்பிடிப்புகளுக்கும், டெலிவிஷன் பூஸ்டர் ஏரியல்களுக்கும் யாழ். நகரில் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
**எஸ். சுலைமான்கண்டு அன் பிறதர்**
5-7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன் : 265

அனைவருக்கும்
எமது உளங்கனிந்த ரம்ழான் நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
உங்கள் உள்ளம் கவர்ந்த நகைகளைத் தெரிவுசெய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்.
**கே. ரி. எம். ஜுவலர்ஸ்,**
67, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## ஈத் முபாரக் வாழ்த்துக்கள்

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
அன்பர்கள்
அனைவருக்கும்
எமது
ஈத் முபாரக்
வாழ்த்துக்கள்.
ஆ-ர்

இறக்குமதி செய்யப்பட்ட
**பிளைவூட்**
கதவுகள் ✶ சீற்றுகள்
(தேக்க டிசைன்களில்)
ஒட்டுபலகை கூட்டுத்தாபனத்தின்
★ பிளைவூட் ★ சிப்போட்
கதவுகள் ✶ சீற்றுகள்
**நாபன் டிரேட்ஸ்**
[சேகரம் கட்டிடம்]
74, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம் போன்: 8162

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
மகிழ்ச்சிகரமான ரம்ழான் வாழ்த்துக்கள்!
இறக்குமதிசெய்யப்பட்ட
● பால்மா வகைகள் ● நூதன விளையாட்டுச் சாமான்கள் ● கோப்பை ● பீங்கான்-கிளாஸ் ● எனமல் ● அலுமினியம் ● எவர்சில்வர் சாமான்களும் ● நெல்குற்றும் ● மாவு அரைக்கும் இயந்திரங்கள் அதன் உபஉறுப்புக்கள் ● சுவர் மணிக்கூடுகள் ● கைக்கடிகாரங்கள் ● மின்சார மோட்டோர்கள் ● மின்சாரவிசிறிகள் ● மின்சார உபகரணங்கள் ● மற்றும் சில்லறைச் சாமான்களுக்கும் ● சுவைமிக்க பேபிமார்க் குளிர்பானங்களுக்கும்
இன்றே விஜயம்செய்யுங்கள்
**ராஜு ஸ்ரோர்ஸ்**
67, 69, கஸ்தூரியார் வீதி: யாழ்ப்பாணம்.
போன் : 372 தந்தி : ராஜு

✶ அனைவருக்கும் எமது இனிய ஈத்-முபாரக் வாழ்த்துக்கள் ✶
கண்ணாடி வகைகள் என்பதும் நிலைபெற்ற ஸ்தாபனம்
**ஜெசிமா பிக்சர் பலெஸ்**
222, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 7127
கிளை : ஜெசிமாஸ், 95/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## "சொந்தப் பிணையில் நெசவாளர்வங்கிக் கடன்பெற வழிசெய்க"

[அரியாலை]

நெசவுதொழிலாளர் தமது சொந்தப்பிணையில் மக்கள் வங்கியில் கடன்பெற வழி செய்தல் வேண்டும் என்னும் கோரிக்கையையும் வேறும் பல கோரிக்கைகளையும் அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபைத்தூதுக்குழுவினர் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு.தேவநேசன் நேசையாவையும் நேரில் சந்தித்து கையளித்துள்ளனர்.

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையினரினால் கையளிக்கப்பட்ட ஏனையகோரிக்கைகளாவன:

"பிறப்புச்சாட்சிப் பத்திரத்தில் இருக்கும் சாதியின் பெயரைக் குறிக்கும் தொழில் பெயரை நீக்குதல்", "அபிவிருத்திசபை மூலம் வேலை வாய்ப்பு அளிக்கும் பொழுது வள்ளுவ சமூகத்தவர்களுக்கு விசேடசலுகை அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கல்" "பரம்பரை நெசவு தொழிலாளர்கள் வாழும் பகுதியில் பற்றிக், பிறிண்டிக்முறை" பயிலும் தொழிற்சாலையை நிறுவுதல்", "வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பெற உதவுதல்" ஆகியனவாகும்.

மகாசபையின் 32வது வருடாந்த மகாநாட்டுக் கோரிக்கைகள்குறித்து இத்தூதுக்குழுவினர் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவரையும் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையாவையும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவரின் மகாநாட்டு அறையில் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

மகாசபைத் தூதுக்குழுவினரின் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்த தலைவரும், செயலாளரும், வள்ளுவசமூகத்து மக்களின் முன்னேற்றத்திற்கு ஆவன செய்வதாகவும், சமர்ப்பித்த கோரிக்கைகள் மீது கவனத்திலெடுத்து ஆவனசெய்வதாகவும் வாக்குறுதியளித்தனர்.

திருவள்ளுவர் மகாசபையின் பொதுச் செயலாளர் திரு. க.கிருஷ்ணராசாவின் தலைமையில் சென்றஇத்தூதுக்குழுவில் மகாசபையின் உபதலைவர் திரு க. கிருஷ்ணராசா, நிர்வாகச்செயலாளர் திரு. ச. தணிகாசலம், பொருளாளர் திரு ஆ. திரவியநாயகம், தென்மராட்சிக்கிளையின் தலைவர், செயலாளர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

## கடையில் புடவைகள் திருட்டு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு நவீன சந்தைக் கட்டிடடத்திலுள்ள பிரபல புடவைக் கடை ஒன்றில் இரவு நேரத்தில் கூரை பிரிக்கப்பட்டு சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியானதுணி வகைகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றி அக்கடை உரிமையாளர்களான திரு. இராசலிங்கம், திரு. சந்திரசேகரம் ஆகிய இருவரும் காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளனர்.

தமது கடையிலிருந்து சுமார் 20 ஆயிரம்ரூபா பெறுமதியான துணிவகைகளும், சேட் வகைகளும் திருடப்பட்டுள்ளன என்று புகாரில் தெரிவித்துள்ளனர்.

கடையின் கூரையிலிருந்த அஸ்பெஸ்டஸ் சீற்றை வெட்டியே திருடர்கள் கடைக்குள் பிரவேசித்து இத் திருட்டை நடத்தியுள்ளனராம்.

காங்கேசன்துறை பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர். கைவிரல் அடையாளமும் படம் பிடிக்கப்பட்டது. (க)

## சமாதான நீதவான்

[யாழ்ப்பாணம்]

மல்லாகத்தைச் சேர்ந்தவரும், ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் வசிப்பவருமான திரு ஆறுமுகம் சின்னத்துரை சமாதான நீதிபதியாக நீதியமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு திருச்செல்வத்தின் அந்தரங்கக் காரியதரிசியாக கடைமையாற்றிய இவர் இளைப்பாறிய உயர் நீதிமன்ற சுருக்கெழுத்தாளராவர்

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தின் உயரப்புலம் கிளையின் தலைவரும், ஆனைக்கோட்டை ஐக்கிய தேசியக்கட்சிக் கிளையின் உப தலைவரும், கிராம அபிவிருத்திச்சங்கம், சனசமூக நிலையங்களின் நிர்வாகியுமான இவர் யாழ் பரமேஸ்வராக்கல்லூரியின் பழைய மாணவருமாவர். (க)

## அனுமதி இல்லை

[கொழும்பு]

அனுராதபுர மாவட்டத்தில் புதிய நகரில் கைத்தொழில் நிறுவனங்கள் ஆரம்பிக்கவும், கட்டடங்கள் அமைக்கவும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

# வடபகுதிக்கு வரும் சு. க. தலைவர்கள்

(யாழ்ப்பாணம்)

சிறீலங்கா சுதந்திரக் கட்சி (சிறிமா பிரிவு) முக்கிய தலைவர்கள் இம்மாதம் 31-ம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மேற்படி கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ரத்னசிறீ விக்கிரமநாயக்கா. முன்னாள் பாராளுமன்ற - விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. கே பி. இரத்னயக்கா, கட்சி உப தலைவர் திரு கே. சண்முகலிங்கம், முன்னாள் கொழும்பு மாநகராட்சி மன்ற முதல்வர் ஜனுப் பௌசி ஆகியோரே வடபகுதிக்கு விஜயம் செய்பவர்களாவார்கள்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் இரு நாட்கள் தங்கியிருந்து, வடபகுதியிலுள்ள கட்சி அமைப்பாளர்களையும், முக்கிய அரசியல் பிரமுகர்களையும், கல்விமான்களையும் சந்தித்து கட்சி நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்துவர்.

இச்சந்திப்பைத் தொடர்ந்து பிரமுகர்களின் கூட்டமும், கட்சி உறுப்பினர்கள் கூட்டமும் நடைபெறவிருக்கிறன.

பிரமுகர்களின் கூட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டே பின்னர் நடைபெறும் கட்சிக்கூட்டத்தில் ஆலோசனை செய்யப்படும். இவைசம்பந்தமாக கொழும்பில் நடைபெறவிருக்கும்கட்சியின் பொதுச்சபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

குறிப்பாக உயர்கமிட்டிக் கூட்டத்தில் தமிழ் மக்களின் முக்கிய கோரிக்கையான மாநில சுயாட்சி பற்றி வலியுறுத்தப்படவிருக்கிறது. [மா]

## பயன்தரும் சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி கல்மெட்டித் திடல் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் வடபகுதியில் பயன்தரும் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி பாடசாலை அதிபர் திரு. சி. வ. ஐயாத்துரை தலைமையில் மற்றும் ஆசிரியர்கள் திரு. க. வைரமுத்து, திருமதி ச. பராசக்தி, செல்வி த. இராஜேஸ்வரி ஆகியோரும் மாணவர்களுடன், கூட்டுத்தாபனங்கள், யாழ் சிறைச்சாலை. தொழில் ஸ்தாபனங்களுக்குச் சென்று பார்வையிட்டனர். (மா)

## இன்று புரட்டஸ்தாந்து ஆசிரியர் ஞான ஒடுக்கம்

(அரியாலை)

புரட்டஸ்தாந்து திருச்சபையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான ஞான ஒடுக்கமும் கிறிஸ்தவ ஆசிரிய சங்கப் பொதுக் கூட்டமும் இன்று வெள்ளிக்கிழமை காலை முதல் மாலை வரை சுன்னாகம் கிறிஸ்தசேவா ஆச்சிரமத்தில் நடைபெறுகிறது.

பிற்பகல் 2 மணிக்கு ஆசிரியர் சங்கக் கூட்டமும் நடைபெறும். எல்லா ஏற்பாடுகளையும் சங்கச் செயலாளர் திரு. தனராஜசிங்கம் செய்துள்ளார். [அ]

BAYER

# ரொக்குத்தயன் 500 ஈ.சி.



வெங்காயப் பயிரைப் பாதிக்கும் ஸ்பொடொப்டரா புழுக்களை (வெங்காயத்தாள் கோதிப்புழு) அறவே ஒழித்திட, தரமான பாயர் நாசினி ரொக்குத்தயன் 500 ஈ. சி. பாவியுங்கள்.

## ஹேக்கெம் லிமிட்டட்,

400, டீன்ஸ் ரோட், கொழும்பு - 10.

3955

## இடமாற்றம்

(மண்டைதீவு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் அல்லைப்பிட்டி உபபணிமனை பிரதம லிகிதர் திரு. எஸ்.சோதிலிங்கம்நெடுந்தீவு உபபணிமனைக்குஇடமாற்றம் பெற்றுள்ளார். இவரது இடத்துக்கு மானிப்பாய் உப அலுவலக பிரதமலிகிதர் திரு. காராளசிங்கம் இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

3-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு கலர்)

ரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - சாவித்திரி
ஜக்கம்மா
[புதிய பிரதி]

வின்ஸர் யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், ஜெயலலிதா, சோ நடித்த
வந்தாளே மகராசி
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி
விரைவில் எதிர்பாருங்கள்
பாலைவனச் சோலை
[கலர்]

ஸ்ரீதர் (யாழ்.நகர்) 21—25.7.82
10-30, 4-30, 7-00, 9-30
Sat. Sundays 2-00 p. m.
Seven Nights in Japan
From 26-7-82
THE TATOO CONNECTION

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
ரஸிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
மோகனப் புன்னகை (கலர்)
அடுத்தவெளியீடு 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
ஜெமினி, பத்மினி, எம். ஆர். ராதா, நாகேஷ்
சித்தி
(புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்) 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சாவித்திரி
மகாதேவி

[illegible] 4 காட்சிகள்
(யாழ் நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
கடைசித் தினம் 26-7-82
கடல் மீன்கள் —கலர்—

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளைநோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

# இன்றைய பலன்

ஆடி மாதம் 7-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(23—7—82)

மேடம்: குறிக்கோளில் இன்று வெற்றி கிடைக்கும். இலட்சியவாதிகள் போற்றப்படுவார்கள். பரந்தமனப்பான்மையுடன் செயலாற்ற விரும்புவீர்கள். நல்ல தினம்,

இடபம்: அறவழியை நாடுவீர்கள். தெய்வ சிந்தை மேலோங்கி நிற்கும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலைதென்படும். புண்ணிய யாத்திரை ஒன்றை மேற்கொள்ள முற்படுவீர்கள்.

மிதுனம்: அதிர்ஷ்ட இலாபங்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. புதுத் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்ற தினம், பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தரும்.

கடகம்: நத்தை வேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டிருக்கும். மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். வேண்டாத தொடர்பால் தவறான போக்குக்கு இடமுண்டு.

சிங்கம்: ஆசை வார்த்தைகளின் மூலம் உங்களிடம் இருந்து அகப்பட்டதை சுருட்டுவதற்கு சிலர் முனைவர். இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். நிதானம் வேண்டும்.

கன்னி: அந்தஸ்தில் உயர்வு தென்படும். எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும். வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

துலாம்: தொடங்கிய விடயம் பாதையில் தடைபடும். இதனால் பொருள் விரயத்திற்கும் இடமேற்படும். குடும்பத்தில் உடல் நலக்குறைவு தோன்றும். சுகாதாரம் வேண்டும்.

விருச்சிகம்: நீண்டநாள் தலையிடி கொடுத்த ஒரு பிரச்னை இன்று நல்ல முடிவுக்கு வரும். தாய்வழி மூலம் புதிய ஆதரவு கிடைக்கும். விளையாட்டு வீரர்களுக்கு இன்று வெற்றித்தினம்

தனு: புத்திரவழியால் புகழ் வந்துசேரும். வெளியூர் பிரயாணமும் உண்டு குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். புதிய தொடர்புகள் ஏற்படும். அதன்வழி மகிழ்ச்சி தென்படும்.

மகரம்: உறவாடிக்கெடுப்பதற்குப் பகையாளிகள்வருவர். உற்சாகம்குன்றும். பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ண ரோகம் தென்படும்.

கும்பம்: வாழ்க்கையில்தென்றல் வீசும். காதல் சிட்டுகளுக்கு கனிவான தினம். கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும். சுபபோக தினம்.

மீனம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்லாம். வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்கநேரிடும். கலகச் செய்திக்கும்இடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை

கு. வேலுப்பிள்ளை

## அளவெட்டியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி விவசாயிகள் கழகத்தின் 1-வது ஆண்டு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இம் மாதம் 24ந் தேதி பிற்பகல் அளவெட்டி பிளுக்கைத் தரவையில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா போஷகராக இருந்து வெற்றிப் பரிசில்களையும் வழங்குவார்.

இப்போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெறும். 1ம், 2ம் பிரிவுகளில் பங்குபெற முடியாத காளைக் கன்றுகள் 3ம் பிரிவில் இடம்பெறும்.

## வடக்கில்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

முதல் தடவையாக இப்போது இவர்களில் 15 பேருக்கு வேலை வழங்குமாறு வட பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு அமைச்சிலிருந்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

[மா-இ]

# தாளையடி திருட்டுவழக்கில் இரண்டாம் எதிரிவிடுதலை

(சாவகச்சேரி)

தாளையடி களவு வழக்கில் 2-ம் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு பளை சுற்றுநீதிமன்றத்தில் நீதிபதி எம். எச், காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

இவ்வழக்கில் 77 டிசம்பர் 6ந் திகதி தாளையடியைச் சேர்ந்த மரியதாஸ் இராசப்பு என்பவருடைய வீட்டில் வானொலிப்பெட்டி உட்பட 1500 ரூபா பெறுமதியான பொருட்களை பட்டப்பகலில் பலாத்காரமாகக் கொண்டு சென்றதாக தாளையடியைச் சேர்ந்த சீவாத்தினம் இராசையா, யோசேப், மரியதாஸ், சிவலிங்கம், வேலுச்சாமி என்பவர்களுக்செதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வ. செல்லத்தம்பியும் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர். முறைப்பாட்டுக்காரரர் சார்பில் சட்டத்தரணி திருமதி நளினி கணேசயோகனும் ஆஜராகினர்.

சாட்சியமளித்த முறைப்பாட்டுக்காரர் மரியதாஸ் இராசப்பு சம்பவதினம் 2ம் எதிரி வரவில்லை எனக் கூறியதும் நீதிபதி 2ம் எதிரி இராசையாவை உடனே விடுதலை செய்தார்.

இராசப்பு தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது கூறியதாவது: முதல்முறை நான் இல்லாதசமயம் றேடியோவை 1ம் எதிரி எடுத்துச்சென்றார்; அதை எனக்கு றோட்டில் கொண்டுபோகும்போது கண்டவர்கள் கூறினார்கள். அதற்கு நான் பொலிசில் முறைப்பாடு செய்தார். அந்தக் கோவத்தில் 4 நாட்களின் பின்வந்து பட்டப்பகலில் என்னைத் தள்ளிவிழுத்திவிட்டு மேசைகள் இரண்டையும் அலுமாரி ஒன்றையும் பலவந்தமாகக் கொண்டுசென்றார்கள்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வ. செல்லத்தம்பி சாட்சியைக் குறுக்கு விசாரணைசெய்கையில், 1926ம் ஆண்டு தொடக்கம் பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள கோடுகளில் வழக்குச்சம்பந்தமாக ஈடுபடுவது உண்மையென்றும், 81 அக்டோபர் 1ம் திகதி இந்த வழக்குச் சம்பந்தமாக இந்த மன்றில் சாட்சியமளித்ததாகவும், 1ம் எதிரி றேடியோவைக் கொண்டுபோனதைக் கண்ட சிலர் தனக்குச் சொன்னதாகவும், ஆனால் பொலிசில் ஜீவரத்தினம் வேலுச்சாமி, யோசேப் தள்ளிவிழுத்திவிட்டுக் கொண்டுசென்றதாக கூறவில்லையென்றும் கூறினார்.

சட்டத்தரணி செ அம்பிகைபாலனும் குறுக்குவிசாரணை செய்தபின் திருமதி ம. அமிர்தசீவி சாட்சியமளித்தார்.

நீதிபதி விசாரணையை ஆகஸ்ட் 10ம் திகதிவரை ஒத்திவைத்தார். [க]

# அரசினதும் மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர்

## சமாதான நீதவான் வீரவாகுவுக்கு பாராட்டு

[புலோலி]

''மக்களினதும் அரசாங்கத்தினதும் நன்மதிப்பைப்பெற்று சமூக, சமய, கலாசார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் திரு. வீரவாகுவுக்கு அகில இலங்கைச் சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டது சாலப் பொருத்தமாகும்'' என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் பிரபல வர்த்தகர் மு. பொ வீரவாகு அகில இலங்கைச் சமாதான நீதவானக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேலைப்புலோலி மக்களால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில்உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்றலில் நாவலர் சனசமூக நிலையத்தலைவர் திரு. பீ. திருச்செல்வம் (உதவித்தபாலதிபர்) தலைமையில்நடைபெற்ற இப்பாராட்டு விழாவில் தொடர்ந்து உரையாற்றிய அரசாங்க அதிபர் குறிப்பிட்டதாவது திரு. வீரவாகுவுக்கு இதுபோன்ற பட்டம் ஏற்கனவேயே வழங்கப்பட்டிருக்கவேண்டும். பலர் பல பட்டங்களைப் பெறுகின்றார்கள். ஆனால் அதனால் மக்கள் பயன்பெறுவதில்லை.

சமாதான நீதவான் பொறுப்புவய்ந்த பதவியாகும். இதுமக்களின் சேவைக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நீதிமன்றத்தில் இருசாரர்களுக்கிடையே நடைபெறும் பிணக்குகளுக்குத்தீர்ப்பு வழங்கப்படுகிறது, நீதிமன்றத்திற்கு வெளியே சென்றதும் அவ்விரு சாரர்களுக்கிடையே பிரச்னைகள் எழலாம். ஆனால் இரு சாரார்களுக்கிடையே உள்ள பிரச்னைகளைத் சமாதான நீதவான்கள் தீர்த்து வைக்கும் போது அமைதியானநிலையான சமரசமாக இருப்பதைக்காணலாம்.

வல்வெட்டித்துறைநகரமுதல்வர் திரு. எஸ். ஞானமூர்த்தி உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

திரு. வீரவாகு அன்பும் பண்பும், துணிவும், கொண்ட ஒரு சேவையாளன். இவர் மக்களுக்குச் சேவை புரிவதற்காகவே இப்பதவியை ஏற்றிருக்கின்றார்.

இவர்கடந்த தேர்தலின் போது எம்முடன் மாறுபட்டிருந்தபோதும் அவர் இன்றுவரை ஒரு சரியான பாதையிலேயே செல்கின்றார். இன்றைய அரசாங்கத்தில் எமது நிலையைப் பார்க்கும்போது எமக்கு ஒற்றுமைதான் மிக முக்கியம் என்பது புலனாகின்றது. கட்சி வேறுபாடுகளினுடன் இயங்கி நாம் விடுதலை பெறமுடியாது. தமிழ்மக்கள் இன்று அரசியல் அனாதைகளாக இருக்கின்றனர். நாங்கள் ஒரே தலைமையின் கீழ் இயங்கவேண்டியது மிகமுக்கியமாகின்றது.

உடுப்பிட்டித் தொகுதியின் முன்னாள் எம். பி. சட்டத்தரணி கே. ஜெயக்கொடி உரையாற்றுகையில் ''ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டமைக்காக அல்ல தமிழ் மக்களின் தலைசிறந்த தலைவன் ஒருவன் என்பதனாலேயே திரு வீரவாகுவைப் பாராட்டுகின்றோம்'' என்றார்.

திரு. எஸ். தாமோதரத்தினால் மேலைப்புலோலி மக்கள் சார்பில் திரு. மு. பொ. வீரவாகுவுக்கு பாராட்டுப் பத்திரமொன்றும் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை நகரமுதல்வர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும் கரவெட்டி பிரதேச சபைத்தலைவர் திரு. என். பாஸ்கரன், பருத்தித்துறை நகர உபதலைவர் டாக்டர் வேல்முருகு, யாழ், உள்நாட்டு உதவிவர்த்தக ஆணையாளர் திரு. ரீ. மார்க்கண்டு யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், யாழ். கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், சட்டத்தரணி என். கிருஷ்ணராசா, கிராமோதயசபைத் தலைவர் திருமதி மகேஸ்வரி பாலகிருஸ்ணன், வித்துவான் க. ந. வேலன், வித்துவான் தேவன், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் திரு சிவா. கிருஷ்ணமூர்த்தி, திரு பா. இரகுநாதன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினார்கள்.

## சித்தாந்த சாஸ்திர ஸ்தாபனம்

[யாழ்ப்பாணம்]

வேலணை நால்வர் மடத்தில் அடுத்த மாதம் 27, 28 29ம் திகதிகளில் சித்தாந்த சாஸ்திர ஸ்தாபனம் நடைபெறவுள்ளது.

மடத்திலுள்ள நடராஜப் பெருமான் முன்னிலையில் இவ் வைபவம் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

## தேர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி]

காலமாக திருத்த வேலைகள் மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றன. பரிவாரங்களில் பிள்ளையார், சுப்பிரமணியர் ஆலயங்கள் கம்பீரமாகக் காட்சி கொடுத்துக் கொண்டு இருக்கின்றன. மகாமண்டபம் தரிசன மண்டபங்கள் வேலைகள் செய்யப்பெற்று காட்சி கொடுத்துக் கொண்டு இருக்கின்றன. சுற்றுமதில்கள் உயர்த்திக் கட்டப்பட்டு, மாணிக்கப்பட்டை தீட்டப்பெற்று காட்சி கொடுக்கின்றன. இவைகளோடு இந்த ஆலயத்தில் வழிபாட்டு முறைகள் யாவும் நேரக்கட்டுப்பாட்டுடன் நடைபெறுகின்றன. இத்தனைக்கும் இவ்வூர் மக்களின் ஒத்துழைப்புத்தான் காரணம். அவர்களது அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் ஆலயத்தில் இத்துணை வேலைகளையும் சிறப்பாக நிறைவேற்றியிருக்க முடியாது.

இன்றும் இவ்வாலயத்தில் ஸ்தம்பக் கொட்டகை வேலை வசந்த மண்டப வேலை, சண்டேஸ்வரி ஆலய அமைப்பு வேலை போன்ற திருப்பணி வேலைகள் செய்ய இருக்கின்றன.

மிகச் சிறப்போடு விளங்கும் இந்த ஆலயத்தில் இன்று இவ்வாலயத்தின் இரதோற்ஸவ தினமாகும். இத்தினத்திலே அடியார்களுடைய அல்லல்களையெல்லாம் போக்கி அருள் பாலித்து வரும் அன்னை இராஜ இராஜேஸ்வரி தேவி தோ ஏறி ஆன்மாக்களுடைய மும்மலங்களையும் அழிக்க வருகிருள்.

# பலாலி ராணுவமுகாமுக்குள் அத்துமீறிப் புகுந்த பெண்!

[மாவிட்டபுரம்]

இராணுவ முகாமுக்குள் பிரவேசிக்க முயன்றபோது இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

பலாலி இராணுவ முகாமுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்க முயன்றதாக கூறப்படும் பொலநறுவையைச் சேர்ந்த டி. ஏ பொடிமெனிக்கா என்னும் இளம்பெண் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

இப்பெண்ணுக்கு அறிமுகமான ஒருவர் பலாலி இராணுவ முகாமில் கடமை புரிவதாகவும், தற்சமயம் குற்றச்சாட்டு ஒன்று தொடர்பாக அவர் இராணுவ விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனைக் கேள்விப்பட்டே இப்பெண்மணி அவரைச் சந்திப்பதற்காகவே இராணுவ முகாமுக்குள் புக முயற்சித்ததாகவும் விசாரணையின்போது தெரிய வந்தது.

இப்பெண்ணை காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்த சமயம் நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் இவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

## எழுப்புதற் கூட்டம் இன்று ஆரம்பம்

[அரியாலை]

நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தின் 154 வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் எழுப்புதற் கூட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவிருக்கின்றது.

ஆலயத்தில் நடைபெறும் எழுப்புதற் கூட்டங்களில் திருகோணமலை மெதடிஸ்த திருச்சபை சேகரக்குரு அருட் திரு ஜோன். டி. ஜெயசோதி அடிகளார் அருளுரை நிகழ்த்துவார்கள்.

பரிசுத்த யாக்கோபு தினத்தையொட்டிய உற்சவ ஆராத [illegible] திரு விருந்தாரா த யாழ்ப்பாண அர்ச்டீக்கன் அருட் திரு ஆர்ங்டீக்கன் அருட்திரு சாம். டிஹோர்சிட்டன் அடிகளார் ஒப்புக்கொடுப்பார்கள்.

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்]

பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈழமாணவர் பொதுமன்றம் இன்று மாலை கண்டனக் கூட்டம் ஒன்றை நடாத்தவுள்ளது.

மானிப்பாய் நகரமண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவிருப்பதுடன் புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆதரவில் பாலஸ்தீன விடுதலை இயக்க வரலாற்றை சித்தரிக்கும் கண்காட்சி ஒன்றும் இம் மண்டபத்தில் காலை முதல் மாலை வரை நடைபெறவுள்ளது.

[மா-இ]

## அதிகாரம் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டணிக்குமிடையில் ஆராயப்பட்டு சில உடன்பாடுகள் காணப்பட்டதாகவும், அவை நடைமுறைப்படுத்தப்படுமெனவும் கூறியிருக்கிறார்.

''கோபத்தில்எழுந்த தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களைமறந்து, தமிழ்இனத்தின் நன்மைகருதி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபையை சிறப்பாக நடத்துவதில் ஒத்துழைக்குமாறு அச்சபையின் உறுப்பினர்கள் எல்லாரையும் கேட்டுக்கொள்கிறேன்.''

(ம-வெ)

## சிறப்புமிகு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அக்பர்'' என இனிமையான தக்பீர் ஒலி ஒலித்துக்கொண்டிருக்கும் அதிகாலையில்எழுந்து குளித்து புத்தாடை அணிந்து அல்லாஹ்வின் வீடான பள்ளிவாசலில் முஸ்லீம்கள் அனைவரும் ஒன்றுகூடி இறைவனைத் தொழுகின்றனர். வீடுதிரும்பியதும் அறுசுவை உணவுவகைகளை உண்டும் பருகியும் நண்பர்களுடனும், உறவினர்களுடனும் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கின்றனர்.

சிலர் உண்டு உடுத்து சந்தோஷமாக இருக்கும் இவ்வேளையில் உண்ணக்குடிக்க வசதியில்லாத ஏழை எளியோர்களைப்பற்றி கொஞ்சமும் நினைத்துப்பார்பதுகிடையாது. ஈகையை மறந்தும், ஏழைகளை ஒதுக்கியும் நண்பர்களுடன் சுவையாகப்பேசுவதிலும் வீண் கேளிக்கைகளிலும் இன்பமாக பொழுதைக்களிப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இந்தப்புனித நாளில் தக்பீர் சொல்லல் தஸ்பீஹ் செய்தல் போன்ற வணக்கங்கள் புரிந்து அல்லாஹ்விற்குநன்றிபாரட்டி மனம் மகிழக்கூடிய நாளாக இத்திருநாளை ஆக்கிக்கொள்வது முஸ்லீம்கள் மீது கடமையாகும்.

ஈகையின் மகத்துவத்தைத் தான் ஈகைத்திருநாளாகும் என்பதை ஈதுல் பித்ர் எமக்கு உணர்த்துகிறது. இப்பெருநாள் உணர்த்தும் உண்மை ஒவ்வொரு முஸ்லீமின் வாழ்விலும் பிரதிபலிக்கவேண்டும். அதன்படி அமல் புரிந்து நற்பேறு பெறுவோமாக.

''ஆமீன்''

மௌலவியா - சுல்பிக்கா கௌது.

# ஆணையாளரின் கடிதங்களுக்கு என்ன நடந்தது?

[யாழ்ப்பாணம்]

''உறுப்பினர்கள் செய்த புகார் தொடர்பாக உதவி கூட்டுறவு ஆணையாளர் வட்டுக்கோட்டை தொகுதி தெ. ப. பொ. உ, வி. சங்கத்தலைவருக்கு அனுப்பிய கடிதங்களுக்கு என்ன நடந்ததென்பது பற்றி விசாரணை நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

கூட்டுறவு ஆக்க ஆணையாளருக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி தெ. ப. பொ. உ. வி. ச. சங்க உறுப்பினரான மு. பரமலிங்கம் அனுப்பி வைத்துள்ள புகார்க் கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உதவி ஆணையாளர் கடிதங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படாததினால் அதுபற்றி சங்க முகாமையாளரிடமும் தலைவரிடமும் கேட்ட போது கடிதங்கள் குப்பைத்தொட்டிக்குள் கிழித்துப் போடப்பட்டுள்ளதாக பதில் கிடைத்ததாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதி பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 9-வது வருடாந்தக் கூட்டம் முறையாக நடைபெறவில்லை யெனக் கூறியும் அக்கூட்டத்தை ரத்துச் செய்யும்படி கோரியும் மேற்படி சங்க உறுப்பினர்கள் சிலர் விண்ணப்பம் ஒன்றை கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பியிருந்தனர். இதன் பேரில் யாழ்ப்பாணம் உதவி கூட்டுறவு ஆணையாளர் மேற்படி சங்கத்திடம் விளக்கம் கோரியிருந்ததாகவும் அதுபற்றி வினவியபோதே முன்கூறியவாறு பதில் கிடைத்ததாகவும் திரு. பரமலிங்கம் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

## தேர்தல்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினருக்கோ சொந்தமானதல்ல. மக்களுக்கே இந்நாடு சொந்தமானது எனவே ஜனநாயக ரீதியில் உங்கள் வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்தி தெரிவை நல்ல முறையில் மேற்கொள்வீர்கள் எனநம்புகிறேன். [இ]


## லொறிகள் தேவை

பொலனறுவையிலிருந்து K. K. S இற்கு கரி டிரான்ஸ்போட் செய்ய லொறிகள் தொன் அடிப்படையில் தேவைப்படுகின்றன.

**S. ரவிசங்கர்,**

**27, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்.**

3962



## உடன் விற்பனைக்கு

1. SANSUI ஸ்ரீறியோ கசெற் டெக்.
2. OLYMPUS-OM-10 SLR கமெரா
3. 28 MM-Wide Angle லென்ஸ்
4. 135 MM-Telephoto லென்ஸ்

அனைத்தும் புதியவை

தொடர்பு:

86, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

3961



## ★ மத்தியகிழக்கு, லண்டன்

செல்வோருக்கு
மிகவும் குறைந்த கட்டணத்தில்
**GULF AIR** டிக்கட்டுகள்
யாழ்ப்பாணத்தில் உடனடியாக
மக்கிறெனெஸ் வழங்குகிறது

**எந்த நாட்டிற்கும்**
**எந்த விமானத்திலும்**
**மிகக்குறைந்த கட்டணத்தில்**
**விமான டிக்கட்டுகள்**


ஃ (TRAVELLERS CHEQUES)
பிரயாணக் காசோலைகள்
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும் அதே
கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

## மக்கிறெனெஸ் ட்றவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 8154


உ

## அந்தியேஷ்டி அழைப்பு



**பரமு செல்வத்துரை**

மலர்வு: 2 - 12 - 1915
உதிர்வு: 23 - 6 - 1982

ஆவரங்கால் அம்பாள் என்ஜினியறிங் உரிமையாளர் அமரர் பரமு செல்வத்துரை அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகளும், வீட்டுக் கிருத்தியமும் இன்று காலை [23 – 7 – 82] அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது இறுதிச் சடங்குகளிற் கலந்து கொண்டவர்கட்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குடும்பத்தினர்.

3966

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவ்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tlegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.